DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 377/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 8 P.W.5 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பொருள்செல்வன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.03.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அமராவதி நகர் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.05.2025 ம் தேதி தலைமை காவலர் 1736 முருகேசன் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த இளவரசி க/பெ சந்திரசேகரன் என்பவர்கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று வந்து என்னிடம் கொடுத்த தகவலின் படி நான் அன்றைய தினமே 19.30 மணிக்கு பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 56/2025 ச/பி 296(பி),115(2), 351(3) BNS மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உதவி ஆய்வாளர் சண்முக மூர்த்தி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
2. பின்னர் உதவி ஆய்வாளர் சண்முக மூர்த்தி 15.05.2025 ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிகண்டன், பழனிசாமி ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7 ஆக**

குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகசர் **அ.சா.ஆ.8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் சம்பவ இடத்தில் அருகில் இருந்த கைக்கு அடக்கமான கருப்பு வெள்ளை கலந்த கல் –1 ஐ அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.9 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தை படிவம் 91 வழியாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 **அ.சா.ஆ.10 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. கைக்கு அடக்கமான கருப்பு வெள்ளை கலந்த கல் **அசாபொ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
4. பின்னர் சாட்சிகள் இளவரசி, மணிகண்டன், பழனியம்மாள், சந்திரசேகரன், சரஸ்வதி ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் எதிரியை தேடி புலன் வைத்த போது 15.05.2025 ம் தேதி காலை 10.00 மணியளவில் செல்வபுரம் வாக்க்கால் அருகில் எதிரி செல்வராஜ் என்பவரை கைது செய்து திரேக பரிசோதனைக்கு பின் கனம் நீதிமன்ற காவலுக்காக தக்க வழிக்காவல் வசம் ஒப்படைத்தார். பின்னர் வாதிக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் ஈஸ்வரமூர்த்தி என்பவரை விசாரித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.11 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த என்னையும் விசாரித்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சொன்ன தேதியில் எதிரி சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் குற்றம் எதும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. தவறான புகாரினை பெற்று சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு பொய் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.